(முற்பகல் 11-20)

3. கவன ஈர்ப்பு.

(1) கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாகத தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களில் சுமார் 250 பேருக்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் துண்டுபட்ட பணிக்காலங்களைக் கணக்கிட்டு செலக்ஷன் கிரேடு வழங்கப் படாமை குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண் 333, நாள் 14—2—1977ன் படி துண்டு பட்ட பணிக்காலத் தைக் கணக்கிட்டு செலக்ஷன் கிரேடு வழங்கும்படி அரசு ஆணை பிறப்பித் தும், கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாகத் தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களில் சுமார் 250 பேருக்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் துண்டு பட்ட பணிக்காலங்களைக் கணக்கிட மறுப்பதால், அவர்களுக்கு வரவேண்டிய செலக்ஷன் கிரேடு வழங்கப்படாமல் இருப்பதால் எழுந்துள்ள அதிருப்தி குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: விவர அறிக்கை@ ஒன்று அவை யின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற விவர அறிக்கையிலே இப்போது அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானமே வேறு. அரசாணை எண் 333, நாள் 14—12—1977-லே நான் சொன்ன குறை தீர்க்கப்பட்டுவிட்டது. ஏனென்றால் 10 ஆண்டுப் பணிக்காலம் என்பது அவர்கள் பணிக்காலத்தையும் துண்டுவிழுந்த அவர்கள் பணியில் இல்லாத காலத்தையும் சேர்த்துக் கணக்கிட்டு செலக்ஷன் கிரேடு வழங்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகும், 1978 க்குப் பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்திரம், மற்ற மாவட்டங் களில் இல்லை, இரண்டு மாவட்டக் கல்வி அதிகாரிகள் மட்டும் இதை அனுமதிக் காது மறுத்து அவர்களே உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்பதைத் தான் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அந்தப் பிரச்சினை இப்போது தீர்க்கப்பட்டது என்று சொல்கிறார்கள். உண்மையாகவே 2 வாரத்திற்கு முன்தான் ஒரு ஆணை போட்டு தீர்க்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு அரசு ஆணையை மறுத்து அந்த இரண்டு மாவட்டக் கல்வி அதிகாரிகள் உத்தரவு

@ 324 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

போட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏன் அப்படி நடத்தினார்கள் என்று கேட்குமா? அதைப்பற்றிப் பரிசீலனை செய்து அரசு அவர்களுக்கு அறிவுரை வழங்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசாணையை சரியான முறையிலே செயல்படுத்தாததற்கு அதிகாரிகளிடம் விளக்கம் கேட்கப்பட்டு அதற்கேற்ப அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) தமிழ்க் கலைக் களஞ்சிய அமைப்பு மூடப்பட்டுள்ளதால் தமிழ் வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்தும் ஊழியர் வேலை இழந்துள்ளது குறித்தும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ்க் கலைக் களஞ்சிய அமைப்பு மூடப்பட்டுள்ளதால் தமிழ் வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்தும், ஊழியர்கள் வேலை இழந்துள்ளது குறித்தும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையிலே, இந்தக் கலைக் களஞ்சிய அமைப்பு மூடப்படுவதற்கான காரணங்களைச் சொல்லி, அதிலே அரசு எடுத்த முடிவில், முக்கியமாக தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் இவ்வெளியீட்டு வேலையைக் கவனிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி தமிழ் நாட்டு பாட நூல் நிறுவனம் இந்தக் கலைக் களஞ்சியத்தை வெளியிடும்போது, இந்தத் தமிழ் கலைக் களஞ்சியத்தின் விலை அதிகமாக இருப்பதாலும், அதைப் படிக்க விரும்புகின்ற எல்லோராலும் அதை வாங்க முடியாத நிலை இருப்பதாலும், அதிகமான விலையில் அந்தப் பதிப்பை

@ 325–326 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.